ஜப்பான் நாட்டு நிதி உதவி ஜனவரியில் கிடைத்து விடும்!

# ஒகேனக்கல் 2-வது கூட்டுக் குடிநீர்த் திட்டம் விரைவில் தொடங்கப்படும்!

## சட்டப்பேரவையில் உறுப்பினர் ஜி.கே. மணி கேள்விக்கு – அமைச்சர் கே.என்.நேரு பதில்!

*சென்னை, அக். 17 -* சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது உறுப்பினர் ஜி.கே.மணி கேட்ட கேள்வியும் நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:-



**ஜி.கே. மணி: -** பெண்ணாகரம் தொகுதி பகுதிகளில் நிலத்தடியில் FLUORIDE என்ற நச்சுத்தன்மை அதிகம் இருக்கின்ற காரணத்தால், பெண்ணாகரம் உள்ளிட்ட தருமபுரி மாவட்டம், கிருஷ்ண கிரி மாவட்டங்களுக்கு தவித்த வாய்க்கு தண்ணீர் வேண்டும், தாகத்திற்கு தண்ணீர் வேண்டும் என்ற கோரிக்கை வைக்கப்பட்டு, சட்டமன்றத்தில் தொடர்ந்து பேசினேன்.

அதை ஏற்றுக்கொண்ட அன்றைய முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திட்டத்தைத் தொடங்கி வைத்தார். அப்போது துணை முதலமைச்சராக இருந்தவர் இன்றைய முதலமைச்சர் அவர்கள் அதற்கு உத்தரவிட்டு தொடங்கி வைத்தார்கள். முழுமையாக தண்ணீர் கிடைக்கவில்லை.

ஆனால், எல்லா கிராமப் பகுதிகளுக்கும், இரண்டு மாவட்டங்களுக்கும் தண்ணீர் செல்லாத காரணத்தா தாலும், நச்சுத்தன்மை இருக்கிறது. நீண்டகாலமாக நிலுவையில் இருக்கின்ற திட்டம், இதை நிறைவேற்ற வேண்டும் என்று இந்த அவையில் பேசிய பிறகு, முதலமைச்சர் அவர்கள், அமைச்சர் நேரு அவர்களை அழைத்து, அங்கு அனுப்பி வைத்து பார்த்தார்கள். அவர்கள் பார்வையிட்ட பிறகும் அது முடியவில்லை. முதலமைச்சர் அவர்களே, நீங்களே வந்து பார்வையிட வேண்டும், அதை நிறைவேற்ற வேண்டுமென்று கோரிக்கை வைத்தேன். முதலமைச்சர் அவர்கள் நேரிலே வந்து பார்வையிட்டு திட்டத்தை தயார் செய்தார்கள். அதை ஜப்பான் நாட்டுக்கு அனுப்பி வைத்து, ஜப்பான் குழு வந்து பார்வையிட்டு இப்போது நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, திட்டம் தொடங்குவதாக அரசாணை வெளியிடப்பட்டிருக்கிறது.

இது தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய இரண்டு மாவட்டங்களிலுள்ள மக்கள் மத்தியில் மிகப்பெரிய வரவேற்பை பெற்றிருக்கிறது. அந்த அரசாணையை பார்த்தவுடன் மக்கள் மகிழ்ச்சியடைந்திருக்கிறார்கள். ஆகவே, முதலமைச்சர் அவர்களும், அரசும் இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்றுவதற்கு அரசு ஆவண செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு: -** முதல்வர் அவர்கள் நேரடியாகப் பார்வையிட்டு ஒகேனக்கல் 2வது கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவித்து, 8,900 கோடி ரூபாய்க்கு அந்தத் திட்டம் உருவாக்கப்பட்டது. அது ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்டது. அவர்களுடைய இசைவைப் பெற்று, ஜப்பான் நாட்டு நிதியுதவி பெறப்பட்டு, அவர்களும் 6 மாதம், 6 மாதம் என்று சொல்லி, ஜனவரி மாதம் ஜப்பான் நாட்டு நிதியுதவியை வழங்கிவிடுவோம் என்று உறுதியாகச் சொல்லியிருக்கிறார்கள்.

அதற்கிடையிலேயே ஒன்றிய அரசினுடைய பங்களிப்பாக 2,570 கோடி ரூபாய் வர வேண்டும். அது வந்தால் ஜனவரி மாதம் முழுமையாக அதனுடைய பணிகள் தொடங்கப்படுவதற்கு TENDER விடப்படும். இப்போது நம்முடைய தமிழ்நாடு அரசின் சார்பாக அதற்கான நிதி ஒதுக்கப்பட்டு 350 கோடி ரூபாய் PMC என்ற அளவிலே ஆரம்ப கட்ட நிலையிலே உடனடியாக TENDER விடுவதற்கு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

எனவே, முதல்வர் அவர்கள் அறிவித்த இரண்டாவது திட்டம் ஆரம்பிக்கப்பட்டு விட்டது. அது ஜனவரியிலே இறுதி செய்யப்பட்டு, முழு திட்டத்திற்கும் TENDER விடப்படும். நம்முடைய முதலமைச்சர் அவர்களால் இந்த ஆண்டு 19 திட்டங்களுக்கு நம்முடைய தமிழ்நாடு அரசின் சார்பாக தமிழ்நாடு அரசினுடைய தொகையாக 5,500 கோடி ரூபாய் அதற்காக நிதி ஒதுக்கப்பட்டுவிட்டது. ஆனால், JAL JEEVAN திட்டத்தில் ஏற்கெனவே முடிக்கப்பட்ட திட்டங்களுக்கு ஒன்றிய அரசிடமிருந்து 1,700 கோடி ரூபாய் வர வேண்டும். இப்போது ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு 2,500 கோடி ரூபாய் தர வேண்டும். ஒகேனக்கல் திட்டம் இல்லாமல், தமிழ்நாடு என்றவுடன் JAL JEEVAN திட்டத்தை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதனால்தான் திட்டங்கள் எதையும் உடனடியாக தொடங்க முடியவில்லை. இந்த ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஜனவரியிலே இறுதி முடிவு எடுக்கப்பட்டு TENDER விடப்பட்டு பணிகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு விவாதங்கள் நடைபெற்றன.

கரூர் துயரச் சம்பவத்தில் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று

# மனிதநேய அடிப்படையில் 14 மணி நேரத்தில் உடற்கூராய்வு!

## கரூர் சம்பவம் குறித்த தகவல் கோரலில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்!

**சென்னை, அக். 17 - முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி, கரூர் துயரச் சம்பவத்தில் மாவட்ட ஆட்சியர் அனுமதி பெற்று மனிதநேய அடிப்படையில் உடற்கூராய்வை உடனே தொடங்கி 14 மணிநேரத்தில் முடிவடைந்தது என்று சட்டப்பேரவையில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப்பேரவையில் தெரிவித்தார்.**

சட்டப்பேரவையில் கரூர் சம்பவம் குறித்த தகவல் கோரலில் எதிர்க் கட்சித் தலைவருக்கு பதிலளித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேசியதாவது :-

கரூரில் நடைபெற்ற சம்பவம் குறித்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மிகத் தெளிவாக இங்கே விளக்கி கூறியிருக்கிறார்கள். அந்த சம்பவம் நடைபெற்ற உடனேயே தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசின் முதன்மைச் செயலாளர் அவர்களை தொடர்பு கொண்டு அந்த அரசு மருத்துவமனைக்கு தேவையான கூடுதல் மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களை அனுப்பி வைப்பதற்கு உத்தரவிட்டார்கள். அந்தவகையில் முதலமைச்சர் அவர்கள் சொன்னது போல மதுரை, சேலம், நாமக்கல், புதுக்கோட்டை, கோவை, திருச்சி, திருநெல்வேலி, திண்டுக்கல் போன்ற ஏறத்தாழ 813 பேரும், ஏற்கெனவே கரூர் மருத்துவமனையிலிருந்து 661 பேர் என ஆக மொத்தம் 1474 பேர் மருத்துவர்கள் மற்றும் கல்லூரி முதல்வர்கள் என அங்கு பணியில் இருந்தார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னதுபோல அந்த மருத்துவமனையில் 3 மேசைகள் மட்டுமே உடற்கூராய்வு செய்ய முடியும். அந்த மருத்துவமனையில் இருந்த உடற்கூராய்வு சிறப்பு மருத்துவர்களின் எண்ணிக்கை 3 மட்டுமே. ஆனால் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இது அவசர அவசியம் கருதி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதி பெற்று எந்தவொரு உடற்கூராய்வு செய்ய வேண்டும் என்று சொன்னாலும் உடற்கூராய்வு இரவு நேரங்களில் செய்வதற்கு விதிமுறைகளின்படி, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஒப்புதல் பெற்று உடற்கூராய்வு செய்யலாம் என்று சட்டத்தில் இடமிருக்கிறது.

அந்த வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அனுமதியினைப் பெற்று 39 பேரின் உடல்களை உடற்கூராய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்படி எடுக்கப்பட்டபோது குறிப்பிட்டு சொன்ன மருத்துவமனைகளிலிருந்து 22 உடற்கூராய்வு மருத்துவர்கள் வரவழைக்கப்பட்டனர். ஆக மொத்தம் 25 உடற்கூராய்வு மருத்துவர்கள் இந்தப் பணியினை செய்யத் தொடங்கி 5 மேசைகளில் செய்யத் தொடங்கினார்கள்.

எதிர்க்கட்சித் தலைவர் சொன்னார் ஒரு உடற்கூராய்வு செய்வதற்கு ஒரு மணி நேரம் முதல் ஒன்றரை மணி நேரம் ஆகும் என்று சொன்னார். ஒரு சில சமூக வலைத்தளங்களில் ஏதோ மூன்று, நான்கு மணிநேரத்திற்கு எல்லாம் உடற்கூராய்வு செய்து முடிக்கப்பட்டது என்று தவறான செய்தியினை ஒளிபரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.



முதல்வர் அவர்கள் எடுத்துச் சொன்னதுபோல 28.09. 2025 அன்று அதிகாலை 1.45 மணிக்கு தொடங்கி உடற்கூராய்வு எப்போது முடிவுற்றது என்றால் 29.09.2025 பிற்பகல் 4 மணிக்கு முடிவுற்றது. இறந்து வந்த உடல்களோடு சேர்த்து மருத்துவமனையில் இருந்த ஒரு உடலோடு சேர்த்து ஒட்டு மொத்தமாக 40 உடல்களுக்கு பிரேத பரிசோதனை செய்யப்பட்டது. ஆக மொத்தம் 14 மணிநேரம் உடற்கூராய்வு பணி நடைபெற்றிருக்கிறது. இந்த உடற்கூராய்வில் கடைசி 5 உடல்களின் பெயர்களில் குழப்பம் இருந்தது, அதெல்லாம் முடிவடைந்ததற்கு பிறகு வீடியோ பதிவுடன் உடற்கூராய்வு செய்யப்பட்டிருக்கிறது.

வீடியோ பதிவில் பிற்பகல் 04 மணி அதாவது 14 மணி நேரத்திற்கு பிறகும் கூட இந்த உடற்கூராய்வு தொடர்ந்தது என்பதற்கு தற்போது வீடியோ ஆதாரம் இருந்துக் கொண்டிருக்கிறது. இதையும் கடந்து அவர் இன்னொன்றை மனதில் வைத்துக் கொள்ள வேண்டும்,

**குஜராத்தில் நடந்த சம்பவம்!**

கடந்த ஜீன் திங்களில் குஜராத் அகமதாபாத் விமான விபத்தில் ஒரு விபத்து, 230 பேர் பயணித்த அந்த விமானத்தில் ஒருவர் தவிர்த்து 229 பேர் சம்பவ இடத்திலேயே மரணமடைந்தார்கள். மரணமடைந்தவர்களின் உடல்கள் கை கால்கள் சிதிலமடைந்து, அவர்களின் உடல்கள் எல்லாம் கரிக்கட்டைகளாகவே மருத்துவமனைகளுக்கு கொண்டு செல்லப்பட்டது. இந்த 229 பேரின் உடல்களை எத்தனை மணி நேரத்தில் உடற்கூராய்வு செய்து முடித்தார்கள் என்றால் 12 மணி நேரத்தில் உடற்கூராய்வு செய்து முடித்தார்கள். குஜராத்தில் நடைபெற்ற சம்பவம். இங்கு 40 உடல்கள் 14 மணி நேர இடைவெளியில் உடற்கூராய்வு செய்யப்பட்டிருக்கிறது. குஜராத்தில் நடைபெற்ற சம்பவத்தில் 12 மணிநேரத்தில் 229 உடல்கள். அந்த உடல்கள் கரிக்கட்டைகளாக பல்வேறு பாகங்களாக பிரிந்து செய்யப்பட்ட உடற்கூராய்வுகள்.

ஆனால் இங்கு 40 பேரின் உடல்கள் முழு உடல்களாக கொண்டு வரப்பட்டு உடற்கூராய்வு செய்யப்பட்டிருக்கிறது. உடற்கூராய்வு செய்ததில் வீடியோ பதிவும் செய்யப்பட்டிருக்கிறது. தற்போத உயர்நீதிமன்றம், உச்சநீதிமன்றம் போன்ற சட்ட நடவடிக்கைகளுக்கு வீடியோ ஆதாரம் தயார் நிலையில் இருக்கின்றது, ஒளிவு மறைவு ஏதுமில்லை, மரணமடைந்தவர்களின் குடும்பத்தினர் அவர்களுடைய துயரை துடைப்பதற்கு, அவர்களுடைய பேரிடரில் நாமும் பங்கேற்பதற்குரிய வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மனித நேயத்தோடு முழு நேரமும் இதில் 1500 பேரை ஈடுபடுத்தி அவர்களது துயரில் பங்கு கொண்டார்கள். இதில் அரசியல் செய்வது, இந்த உடற்கூராய்வில் சந்தேகம் கிளப்புவது ஏற்புடையது அல்ல என்பதை தங்களின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் ஆம்புலன்ஸ் குறித்து சொன்னார்கள். தமிழ்நாட்டில் 1330 ஆம்புலன்ஸ்கள் இருக்கின்றன. உடற்கூராய்வு முடிந்தவு டன் 40 உடல்களை கொண்டு சென்று தருவதில் அருகில் உள்ள ஆம்புலன்ஸ்கள் கொண்டு வரப்பட்டன.

கரூர் மாவட்ட தி.மு.க.வினர் உண்மையில் சேவை மனப்பான்மையோடு 8 முதல் 10 ஆம்புலன்ஸ்கள் வழங்கினார்கள். நேரு ஸ்டேடியத்தில் தமிழ்நாட்டில் யாரோ எல்லாம் கொடுத்த வெள்ள நிவாரணத்தில் உங்களது பெயர்களை ஸ்டிக்கராக போட்டு ஒட்டி விநியோகம் செய்தீர்கள். இதைவிட ஒரு மோசமான அரசியல் வேறு எங்கேயும் இருக்க முடியுமா?

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் சட்டப் பேரவையில் உரையாற்றினார்.

கள்ளக்குறிச்சி மாவட்டம், சின்ன சேலம் ஒன்றியம், உலகங்காத்தான் ஊராட்சியில் இந்திய அஞ்சல் துறை விருதாச்சலம் கோட்டம் சார்பில் கண்காணிப்பு விழிப் புணர்வு சிறப்பு கிராம சபைக் கூட்டம் நடைபெற்றது. இதில் தே.மலையரசன் எம்.பி. கலந்து கொண்டார். மேலும் நிகழ்ச்சியில் திருச்சி மத்திய மண்டல அஞ்சல் துறை தலைவர் நிர்மலாதேவி, விருதாச்சலம் கோட்டை கண்காணிப் பாளர் ஜெயசீலன், உதவி அஞ்சல் கண்காணிப்பாளர் பானுமதி, விருதாச்சலம் கோட்ட உதவி கண் காணிப்பாளர் மீனாட்சிசுந்தரம், ஊராட்சி மன்றத் தலைவர் சுசிலா ஆகியோர் கலந்து கொண்டனர்.







போக்குவரத்து நெரிசலைக் குறைக்க

# மணப்பாறை நகரில் புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை!

## சட்டப்பேரவையில் – கேள்வி நேரத்தின்போது அமைச்சர் எ.வ.வேலு பதில்!

*சென்னை, அக். 17 -* மணப்பாறை நகரில் போக்குவரத்துத் நெரிசலைக் குறைக்க புறவழிச் சாலை அமைக்கப்படுமா என்று சட்டப்பேரவையில் உறுப்பினர் ப.அப்துல் சமது கேள்விக்கு பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ.வேலு பதிலளிக்கையில், மணப்பாறை நகரில் புறவழிச் சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று பதிலளித்தார்.

இது குறித்து விவாதம் வருமாறு:-

ப. அப்துல் சமது: எங்களுடைய மணப்பாறை நகரத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகின்ற காரணத்தால், நீண்டகாலமாக புறவழிச் சாலைக்கான பணிகள் தொடங்கப்படாமலேயே இருக்கின்றன. தற்போது நில எடுப்புப் பணிகள் நடைபெறுவதாக நாங்கள் கேள்விப்படுகிறோம். அந்தப் பணிகளை முடித்து, விரைவில் புறவழிச் சாலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டுவிழா நடைபெறுமா?

அமைச்சர் எ.வ.வேலு: மணப்பாறை என்பது அனைவருக்கும் தெரிந்த புகழ் பெற்ற ஊர். அந்தக் காலத்திலே, ‘மணப்பாறை மாடு கட்டி’ என்று விவசாயம் சம்பந்தப்பட்ட திரைப் படப் பாடலில் இடம் பெற்ற ஊர் அந்த ஊர். தோழமைக் கட்சி சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்கு நான் சொல்லிக் கொள்வது என்னவெனில், நான் ஆரம்பத்திலேயே கூறியதுபோன்று, இத்துறையைப் பொறுத்தவரையில், தற்போது 85 சதவிகித நில எடுப்புப் பணிகள் முடிந்தால்தான் திட்ட மதிப்பீடே தயார் செய்யப்படும். சில நேரங்களில், டெண்டர் விட்டுவிட்டு, நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதால் பல்வேறு விமர்சனங்களெல்லாம் எழுந்தன. ஆனால், இந்த ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, 85 சதவிகித நில எடுப்புப் பணிகள் முடிந்தால்தான், திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, சாலை அமைக்கின்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளை அழைத்து, முன்னுரிமை அளித்து விரைந்து அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும்.



இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

வேளாண் வணிகத்துறையின் செயல்பாடுகள் குறித்து வேளாண்மை விற்பனை – வேளாண் வணிகத்துறையின்

# மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் - விற்பனைக்குழு செயலாளர்களுடன் ஆய்வு!

## அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மேற்கொண்டார்!

*சென்னை, அக். 17 -* வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம். ஆர்.கே.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் (15.10.2025) வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் செயல்பாடுகளை மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் (வேளாண் வணிகம்) மற்றும் விற்பனைக்குழு செயலாளர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.



வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் வேளாண் விளைபொருட்களின் உற்பத்தி அதிகமாக இருக்கிற காலங்களில் அதன் விலை மிகவும் வீழ்ச்சியடைந்து விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுவதை தவிர்த்திடவும் விளைபொருட்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்கும் வகையில் தமிழ்நாடு அரசினால் நிறுவப்பட்டுள்ள மதிப்பு கூட்டு மையங்களையும் 84 முதன்மை பதப்படுத்தும் நிலையங்களையும் சீரிய முறையில் செயல்பாட்டிற்க்கு கொண்டு வர உரிய நடவடிக்கை எடுத்திட அறிவுறுத்தினார்.

முதன்மை பதப்படுத்தும் நிலையங்களை பயன்படுத்தும் சந்தை ஒருங்கிணைப்பு பங்குதாரர்கள் தமிழ்நாட்டு விவசாயிகளிடமிருந்து விளைபொருட்களை கொள்முதல் செய்வதனை உறுதி செய்திடவும், பதப்படுத்தப்படும் பொருட்களை உள்ளூர் சந்தைகள் மட்டுமல்லாது வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்திட உரிய வழிகாட்டுதல்களை வழங்கிடவும் அறிவுரை வழங்கினார். இந்த 84 முதன்மை பதப்படுத்தும் நிலையங்களால் இதுவரை விவசாயிகளிடமிருந்து கொள்முதல் செய்யப்பட்ட விளைபொருட்களின் விவரங்கள், பயனடைந்த விவசாயிகள், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் விற்பனை மற்றும் ஏற்றுமதி ஆகிய விவரங்கள் அடங்கிய அறிக்கையினை சமர்ப்பித்திட துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்கள். தலைமையிடத்திலிருந்து ஒரு குழு அமைக்கப்பட்டு அனைத்து முதன்மை பதப்படுத்தும் நிலையங்களையும் ஆய்வு செய்து விரிவான அறிக்கை சமர்பித்திட கேட்டுக்கொண்டார்கள்.

மேலும், அனைத்து முதன்மை பதப்படுத்தும் நிலையங்களையும் முழுமையாக பயன்படுத்திட அறிவுரை வழங்கினார்.

விளைபொருட்களை சேமித்து வைத்து உயர்ந்த விலை கிடைக்கப்பெறும் காலங்களில் விற்பனை செய்திட ஏதுவாக மாநிலம் முழுவதும் 284 ஒழுங்குமுறை விற்பனைக்கூடங்கள் செயல்படுகின்றன. விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களின் வசதிகளை முழுமையாக பயன்படுத்தி நியாயமான விலை கிடைப்பதை உறுதி செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுத்திட அறிவுரை வழங்கினார்கள். ஒழுங்குமுறை விற்ப னைக் கூடங்களில் காலியாக இருக்கும் சேமிப்பு கிடங்குகளை தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபக் கழகத்தின் உபயோகத்திற்கு வழங்கிட அறிவுறுத்தினார்.

வேளாண் விளை பொருட்களுக்கான 100 மதிப்பு கூட்டும் மையங்கள் அமைக்கும் சிறப்பு திட்டம் நடப்பாண்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ரூ.10 கோடி வரையிலான புதிய திட்டங்களுக்கு திட்டச் செலவில் 25 சதவீதம் மற்றும் பெண்கள், தொழில் முன்னேற்றத்தில் பின்தங்கிய வட்டாரங்களில் தொழில் துவங்கும் தொழில் முனைவோர்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு 35 சதவீதம் என அதிகபட்சமாக ரூ.1.50 கோடி வரை மானியம் வழங்கப்படுகிறது. இது தவிர 5 சதவீதம் வட்டி மானியம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும். கூடுதலாக, வேளாண் உட்கட்டமைப்பு நிதி திட்டத்தில் (AIF) 3 சதவீதம் வட்டி மானியமும் பெறலாம். இத்திட்டத்திற்கான பயனாளிகள் தேர்வு நடைபெற்று வருகிறது. திட்டங்களுக்கான பயனாளிகளை துரிதமாக தேர்வு செய்து திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்திட அனைத்து அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளர், வேளாண்மை - உழவர் நலத்துறை வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறை ஆணையர் த.ஆபிரகாம், வேளாண் வணிகத்துறையின் மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர்கள் மற்றும் விற்பனைக்குழு செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**எஸ். இராகவானந்தம்**

**அக்டோபர் 17 (1999)**



**திராவிட இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவர்.**

**தொழிற் சங்கத் தலைவராக பணியாற்றியவர்.**

**தமிழக சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக அமைச்சராகவும் பணியாற்றியவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**